# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2007 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உள அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

*(2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*


2007, சனவரி மாதம் 26 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.75** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உள அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச.வ.ஒ. (கூட்டி) 28/2006*

### உள அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"உள அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையம்" என்றழைக்கப் படுவதும், அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர் களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப் பட்ட எல்லாக் குறிக்கோள்களையும், சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புடைய கருமங்களையும் பயனுறக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருந்ததாலும் ; அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக் கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ, அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் அது இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, உள அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*உள அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உள அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்மேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதன கத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "உள அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி நிலையம்" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப் பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதி ராக வழக்குத்தொடுக்கவும்படலாமென்பதுடன் பொதுஇலச்சினை

யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :—

(அ) இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிச் செயற்பாடுகளைப் பரப்புதலும் "சமத – விதர்ஷனா" போன்ற தியான முறைகளில் ஆர்வமுள்ளோருக்குப் பயிற்சியளித்தலும் ;

(ஆ) இலங்கையிலும், வெளிநாடுகளிலும் ஒழுக்க நெறிகள் பற்றிய பயிற்சியையும், உளக்கல்வி மற்றும் உள அபி விருத்தி ஆகியவற்றைப் பேணி வருவதற்கும், முன்னேற்று வதற்கும் தேவையான வசதிகளையும் வழங்குதல் ;

(இ) பொதுமக்கள் மத்தியில் தோன்றுகின்ற உளரீதியான சிக்கல்கள், பிரச்சினைகள் அது போன்ற பிரச்சினை களைத் தீர்ப்பதற்கேதுவான தரும உபதேசங்களை வழங்குதல் ;

(ஈ) இலங்கையில் பல்கலைக்கழகங்கள், கல்வியியல் பீடங்கள், பிரிவேனாக்கள், பாடசாலைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களிலும், வெளிநாடுகளிலும் இருக்கின்ற உள அபிவிருத்திப் பணிகளின்பால் விருப்பமும், ஆர்வமும் கொண்டுள்ளவர்களை ஊக்குவித்தலும், அத்தகைய ஆய்வுப் பணிகளுக்கான அனைத்து வசதிகளையும், நூலக வசதிகளையும் வழங்குதல் ;

(உ) பாலகர்கள், இளைஞர்கள், முதியோர்கள் போன்ற வர்களின் உடல், உள ரீதியான பூரண சுகாதார அபிவிருத்திக்கு உதவுதல், விசேட கல்வி வசதிகள் தேவைப்படும் குருடர், செவிடர், ஊமைகள் சிறுவர் களுக்கான வேலைத் திட்டங்களை அமுலாக்குதல் ;

(ஊ) மதுபானம், போதைப்பொருட்கள், பலவிதமான சமூகத் துஷ்பிரயோகங்கள் மற்றும் சமூக விரோத செயல்களுக்கு அடிமையாகி உள்ளவர்களை அவற்றில் இருந்து மீட்டெடுக்கும் நோக்கில் அவர்களுக்கு அறிவூட்டலும், அவர்கள் மத்தியில் அறிவு, திறன், மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்துதலும், தேகாரோக்கியத்தை பேணுவதற்கேதுவான ஆலோசனைகளை வழங்குதலும் ;

(எ) கடமை நேரத்தில் கவனத்திற்கெடுத்தலும், அவர்களைப் மனப்பயிற்சியில் ஈடுபடுத்தலும் ; அத்துடன்

(ஏ) பாடசாலையில் இருந்து விலகிச் செல்லும் மாணவ, மாணவிகளுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கான தொழிற்பயிற்சி நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல்.

*கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**4.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்திற்கும் அமைய —

(அ) உதவுதொகைகள், மானியக் கொடைகள் மற்றும் அத்துடன் நன்கொடைகளைப் பரிந்து கேட்டல், சேகரித்தல் மற்றும் பெறுதல் ;

(ஆ) கூட்டுத்தாபன நோக்கங்களுக்குத் தேவைப்படும் நிலங்கள் மற்றும் கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், பெறுதல், வாடகைக்குப் பெறல், நிருமாணித்தல் மற்றும் வேறு வகையாகப் பெறல் ;

(இ) வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி கடன் பெறுவதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத பணத்தை முகாமைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழுமத்துடன் உடன் படிக்கை அல்லது ஒப்பந்தம் செய்தல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அங்கத்தவராக இருந்த ஆட்களை மீண்டும் சேர்த்துக்கொள்வதற்கான கட்டணத்தை அறவிடுவதற்கும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், ஊழியர்களையும் நியமிக்க, சேவையிலீடுபடுத்த, வேலை நீக்கஞ் செய்ய அல்லது சேவையை முடிவுறுத்துவதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கக் கூடியவாறான சம்பளம், படிகள் மற்றும் பணிக் கொடைகளைச் செலுத்துவதற்கும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக ஏதேனும் உள்நாட்டு, வெளிநாட்டு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளிலிருந்து நிதியுதவி உதவி மற்றும் ஒத்துழைப்பைப் பெறல் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான இடைநேர்விளைவான அல்லது உசிதமான அத்தகைய வேறு எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றுவதற்கும்,

தத்துவமுடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தில் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கிணங்க தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களையும், வேறு ஆட்களையும் கொண்ட (இதனகத்துப்பின்னர் "முகாமைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைக்குழுவொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், கூட்டுத்தாபனத்தில் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைவாக நிருவகித்தல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்குவதற்கு நேர்முந்திய திகதியில் நிலவிய நிலையத்தின் முகாமைக்குழு உறுப்பினர்களாக இருந்தவர்களைக் கொண்டதாக கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு அமைதல் வேண்டும்.

அங்கத்தவர் பெயர்ப்பட்டியல்.

**6**. இச்சட்டம் பயனுறுவதற்கு நேர்முந்திய திகதியில் நிலையத்தின் அங்கத்தவர்களாக இருந்த அனைவரினதும் பெயர்களையும், அதன் பின்னர் கூட்டுத்தாபனத்தில் உரிய வகையில் அங்கத்தவர்களாக சேர்த்துக்கொள்ளப்படுகின்றவர்களின் பெயர்களையும் உள்ளடக்கப்படக்கூடியதான அனைவரினதும் பெயர்ப்பட்டியலொன்றைப் பேணி வருவதற்கான நடவடிக்கைகளைக் கூட்டுத்தாபனம் மேற்கொள்ள வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7**. *(1)* கூட்டுத்தாபனத்தால் அதன் அங்கத்தவர்களின் ஏதேனும் ஒரு பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினரில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாத எண்ணிக்கையுடையோரின் பெரும்பான்மை வாக்கைக்கொண்டு இச்சட்டத்திற்கு அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டங்களுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளை, கீழ்க்காணும் விடயங்கள் அனைத்தும் சம்பந்தமாகவோ அவ்வாறன ஒரு விடயம் சம்பந்தமாகவோ காலத்திற்குக்காலம் ஆக்குதல் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) அங்கத்தவர்களை வகைப்படுத்தல், ஒவ்வொரு பிரிவையும் சேர்ந்த அங்கத்தவர்களுக்கான கட்டணங்கள், அவர்களைச் சேர்த்துக்கொள்ளல், அவர்களை அகற்றுதல், விலக்குதல் அல்லது அவர்களின் விலகுதலும் ;

(ஆ) முகாமைக் குழுவைத் தெரிவு செய்தல், பேரவை உறுப்பினர்களின் பதவி விலகல், பதவி நீக்கம் அல்லது பதவியிலிருந்து வெளியேற்றல் மற்றும் முகாமைக் குழுவின் தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், மற்றும் ஊழியர்களின் நியமனம், அவர்களைப் பதவியிலிருந்து விலக்குதல், அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் நடத்தைகள் ;

(ஈ) முகாமைக்குழுவொன்றின் கூட்டங்களின்போது கடைப்பிடிக்கப்படுகின்ற நடைமுறைகள், கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தலும் நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களின் இடம், நேரம், கூட்டநடப்பெண் மற்றும் கூட்டங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் அங்கத்துவம் மற்றும் முகாமைக் குழுவிற்கான தகைமைகள் மற்றும் தகைமையீனங்கள் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை நிருவகித்தலும், முகாமை செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்து தலும் ;

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் ஏதேனும் விதிகள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஆக்கப்படும் அதே முறையிலேயே மாற்றப் படலாம், திருத்தப்படலாம், சேர்க்கப்படலாம் அல்லது முடிவுறுத் தப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**8**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் சட்டத்தில் முறைப்படி இயலுமானதாகவும், ஆற்றலுடையதாகவும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள வுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக் கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பெறப்படவுள்ள எல்லா முகாமைக்குழு தீர்மானிக் கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*சங்கத்தால் அல்லது சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான கடன்கள்.*

**10.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிலையத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அத்திகதியன்று செலுத்தப்படற்பாலனவான கடன்களும், உதவுதொகைகளும், கட்டணங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

*கணக்காய்வும், கணக்குகளும்.*

**11.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவின் தகைமைபெற்ற "கணக்காய்வாளர்" என்பது –

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று என்று பொருள்படும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் கடன்கள், பொறுப்புகள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருந்தால் அத்தகைய சொத்து கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால் அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு அந்நிறுவனத்தின் அல்லது அந்நிறுவனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது சொத்தை பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின் கொடுத்தல் வேண்டும் அல்லது கைமாற்றுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தைக் கலைக்கும் நேரத்தில் அல்லது அதனைக் கலைக்கும் முன்னர் அத்தகைய நிறுவனத்தை அல்லது நிறுவனங்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளர் அல்லது கூட்டுத்தாபனத்தினால் உரியவகையில் அதிகாரமளிக்கப்பட்ட கூட்டுத்தாபன அங்கத்தவரொருவரினதும் முன்னிலையிலன்றி கூட்டுத்தாபனத்தின் இலச்சினை சாதனமெதிலும் பொறிக்கப்படலாகாது. அத்துடன் அவர்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாகச் சாசனத்தில் தங்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*அங்கத்தவர்களின் பொறுப்புக்களின் வரையறை.*

**14.** கூட்டுத்தாபனத்தின் எந்தவோர் அங்கத்தவரும் கூட்டுத்தாபனத்தின் கடன் மற்றும் பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கும் கருமத்திற்காகவோ, வேறு ஏதேனும் கருமத்திற்காகவோ அவரிடமிருந்து கூட்டுத்தாபனம் அறவிடவேண்டிய உதவுத்தொகைப்

பணத்தை விஞ்சியதான அங்கத்துவப் பணத்தொகையைச் செலுத்தக் கட்டுப்பட்டவர்களாக அமைதல் ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**16.** இச்சட்டத்திலுள்ள சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்